# நற்றிணை நவிலும் பழந்தமிழர் வாழ்வியல் கூறுகள்

*நி. அமிருதீன், எம்.ஏ., எம்ஃபில்., நெட்*
முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

*முனைவர் சு. சாகுல் ஹமீது, எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி., பிஜிடிஎ*
ஆய்வு நெறியாளர், முதுகலை தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி
DOI: https://doi.org/10.5281/zenodo.13783619

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியங்கள் பழந்தமிழர்களின் வரலாற்றை பறைசாற்றுகின்றன. அவ்வகையில் நற்றிணையில் ஏராளமான நற்பண்புகளும், பிற பழக்க வழக்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. நல்லோர்களின் நட்பு குறித்தும் அஃறிணை உயிர்களிடம் கூட இரக்கம் காட்டும் தன்மையை நற்றிணை விரிவாக எடுத்தியம்புகிறது. சங்க கால மக்கள் விருந்தோம்பலுக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கி வந்தார்கள். பல வீடுகளில் எப்பொழுதும் விருந்தினர்கள் இருந்து கொண்டே இருப்பர். சங்க காலத்திலேயே தமிழர்கள் நாய்களுக்கும் பிற பிராணிகளுக்கும் பயிற்சிகள் அளித்ததையும் நற்றிணை உரைக்கின்றது. கைப்பேசியை பார்த்துக் கொண்டு தனிமையில் தனிமையில் முடங்கி இருக்கும் இளைஞர்களை இளம் பெண்களை வீட்டுக்கு வெளியே வருமாறு நற்றிணை அழைக்கிறது. நவீன மருத்துவத்திற்கு இணையாக சங்க காலத்திலேயே பல அறுவை சிகிச்சை மருத்துவங்கள் நடைபெற்றதையும் நற்றிணை விரிவாக பேசுகிறது. சங்கத்தமிழர்களின் பல்வேறு நற்பண்புகளையும் பழக்கவழக்கங்களையும் இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.*

## முன்னுரை

எட்டுதொகையும் பத்துப்பாட்டுமான சங்க இலக்கியம் என்பது சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கையை விவரிக்கும் காலக்கண்ணாடியாகும். இரண்டாயிரம் ஆண்டுகளை கடந்து இன்றும் நம் கண் முன்னால் தமிழர் வாழ்வு தெளிவாகத் தெரிவதற்கு சங்க இலக்கியங்களே அடிப்படையாகும். இன்று நாம் காணும் பல்வேறு நற்பண்புகளும், பழக்க வழக்கங்களும், பல்வேறு செயல்களும் தற்போதைய நாகரிக வாழ்க்கைக்குச் சொந்தமானது என நாம் எண்ணுகிறோம். ஆனால் அவற்றையெல்லாம் சங்கத் தமிழர்கள் செம்மாந்து செய்து வந்ததை எட்டுத்தொகை நூல்களும் பத்துப்பாட்டு நூல்களும் நமக்கு விளக்கிக் கூறுகின்றன. இந்த அடிப்படையில் எட்டுத்தொகையின் முதல் நூலான நற்றிணையில்கூறப்பட்ட பழந்தமிழர்வாழ்வியலின் நற்பண்புகளையும் வியக்கத்தக்கச் செய்திகளையும் ஆராய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறை

இக்கட்டுரையில் பகுப்பாய்வு, விளக்க முறை ஆய்வு ,தொகுப்பாய்வு என்ற ஆய்வு நெறிமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன

## அன்பு

தூய எண்ணமும் நல்ல உள்ளமும் படைத்தவர்கள் அனைவரிடத்திலும் நட்பு பாராட்டுவார்கள். அப்படிப்பட்ட நட்பைக் குறித்து நற்றிணை கூறும் போது,

**முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'**

என உரைக்கிறது. அதாவது நல்ல எண்ணம் உடையவர்கள்அவர்களின்நண்பர்கள்நஞ்சை கொடுத்தாலும் அதை மறுக்காது குடித்து விடுவார் என்ற செய்தியை விவரிக்கிறது. **இங்கு நாகரிகர் என்ற சொல் கண்ணோட்டம் உடையவர்கள், கருணையுள்ளவர்கள், இரக்கமுடையவர்கள், தாட்சண்யம் உள்ளவர்கள், என்ற பொருளில் வந்திருப்பதைக் காணலாம்.**[2] என்கிறார் சாமி சிதம்பரனார். இதே கருத்தை,

**பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்**[3]

என்ற திருக்குறளும் வலியுறுத்துவது கவனிக்கத்தக்கதாகும். பொதுவாக இரக்கமுடையவர்களிடம் நட்பு பாராட்டுதல், இரக்கம் காட்டுதல், பொறுமை காட்டுதல், அன்பு காட்டுதல், குற்றங்களை பொறுத்து மன்னித்தல் போன்ற சிறந்த தன்மைகள் காணப்படும். இத்தகைய பண்புகள் உள்ளவர்களாக பண்டைய தமிழர்கள் வாழ்ந்தனர்.

## இரக்கம்

பண்டைய கால தமிழர்கள் அனைத்து உயிர்களிடமும் இரக்கம் காட்டி வாழ்ந்து வந்தார்கள். காரணம் இல்லாமல் எந்த உயிருக்கும் துன்பம் இழைக்க மாட்டார்கள். ஒரு தலைவன் தேர் மீது அமர்ந்து கொண்டு கடற்கரை வழியாக வருகின்றான். வழி எங்கும் நண்டுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. தேரோட்டி மிகவும் கவனமாக நண்டுகள் நசுங்காதபடி தேரை ஓட்டி வருகின்றான். இதற்காக அவனுக்கு நிலவும் உதவுகிறது. இதனை,

**புணரி பொருத பூமணல் அடைக்கரை,**
**ஆழி மருங்கின் அலவன் ஓம்பி**
**வலவன் வள்பு ஆய்ந்து ஊர**
**நிலவு விரிந்தன்றால் காணலானே**[4]

என்ற பாடல் விரித்துரைக்கிறது. அதாவது அலைகள் மோதுகின்ற - ஒலி பொருந்திய மணல் நிறைந்த கடற்கரையின் கரையிலே - சக்கரங்களின் அடியிலே நண்டுகள் அகப்பட்டுக் கொள்ளாதபடி பாதுகாத்துக் கொண்டு - தேரோட்டி குதிரைகளின் வாரைப் பிடித்து இழுத்து கவனத்துடன் தேரை ஓட்டினான். இச்சமயத்தில் அக்கடக்கரையில் நிலவும் புறப்பட்டது என பாடல் செல்கிறது. இந்நிகழ்ச்சி தமிழர்களின் கருணையை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது இரக்கம் காட்டுவது என்ற செல்வமே ஒரு மனிதனுடைய சிறந்த செல்வம் என நற்றிணை பகர்கிறது. அதிகாரதோரணையில் பேசுவதும், விரைந்து செல்லும் வாகனங்களில் ஏறிச் செல்வதும் செல்வமல்ல. தான் செய்த செயல்களின் நல்ல பலன்களைத் தான் சான்றோர் செல்வம் என கருதுவர். தன்னை கண்டவர்களின் துன்பம் உடனே நீங்கும் படியாக அவர்களிடம் இரக்கம் காட்டக்கூடிய செல்வமே சிறந்த அழியாத செல்வம் என்ற கருத்தை பின்வருமாறு நற்றிணை உரைக்கின்றது

**நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்**
**செல்வம் அன்று; தம்செய் வினைப்பயனே**
**சான்றோர் செல்வம் என்பது; சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மெய்கண்ட செல்வம், செல்வம் என்பதுவே.**[5]

இதன் வழியாக இரக்கம் என்பதன் வரையறையை சங்க கால மக்கள் மேற்கொண்டு இருந்த முறையினை அறிய முடிகிறது.

## விருந்து

தற்காலத்தில் விருந்தினர் என்றாலே நாம் உறவினர்களைத் தான் எண்ணுகின்றோம். விருந்துக்கு வருபவர்கள் எல்லாம் விருந்தினர்கள் அல்ல. உண்மையில் முன் பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று சொல்லப்படும் அவர்கள் யாராக இருந்தாலும், எங்கிருந்து வந்திருந்தாலும் அவர்களை வரவேற்று உணவளித்தல் தமிழர் பண்பாடு ஆகும். எப்பொழுதும் விருந்தினர்களை உபசரித்துக் கொண்டே இருப்பதை. ஒரு தலைவி ..

**நன்மனை நனி விருந்து அயரும்**
**கைதூ வின்மையின், எய்தாம் ஆறே.**[6]

என்கிறாள்.

*இப்பாடல் விருந்தோம்பலின் உயர்வையும், வழக்காற்றையும் புலப்படுத்துகிறது. அதாவது எனக்கும் என் கணவனுக்கும் இடையே சண்டை ஏற்படுவதில்லை என ஒரு தலைவி கூறுகின்றாள். அதற்குக் காரணம் என்னுடைய வீட்டிலே ஏராளமான விருந்தினர்கள் எப்பொழுதும் தங்கிக் கொண்டே இருக்கின்றனர். அவர்களை உபசரிப்பதிலேயே எங்கள் நேரம் கழித்து விடுகிறது. ஓய்வு என்பதே இல்லை. ஆதலால் எங்களுக்குள் சண்டை தோன்றுவதற்கு இடமே இல்லை என பதில் உரைக்கிறாள்.*

*நற்றிணை வழியாக* ***விருந்தினர்கள் ஊனும் உணவை வெறுத்தால், பால் கலந்து செய்தனவும் வெல்லப்பாகு கொண்டு செய்தனவும் ஆகிய இனிய பண்ணியங்களைப் புரவலர்கள் தந்து அவர்களை இன்புறுத்துவர் இரவில் வாயிற்கதவை அடைக்கும்முன் உண்ணும் விருந்தினர் உளரா எனப் பார்த்துக் கதவடைத்தல் பண்டை வழக்கம்***[7] *. என்கிறார் முனைவர் கந்தசாமி.*

*இதன் வழியாக சங்கத்தமிழரின் விருந்தோம்பல் பண்பு தெளிவாக விளங்க முடிகின்றது.*

### பயிற்சி பெறும் நாய்கள்

*இன்று உலகெங்கிலும் பிராணிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. காவல்துறையில் நாய்களுக்கும், சர்க்கஸில் பல்வேறு விலங்குகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன ஆனால் இதற்கெல்லாம் முன்னோடி சங்கத் தமிழர்கள் தான். அக்காலத்தில் கரடி வேட்டையிலும் நாய்கள் பயன்படுத்தப்பட்டன. இதனை,*

***போகிய நாகப் போக்கரும் கவலைச்'***
***சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஓறுத்தல்***[8]

*இவ்வரிகளுடைய பாடலின் பொருளாக பி.டி சீனிவாசஐயங்கார்கூறும்பொழுது* ***"உயர்ந்த, நாகமரங்கள் அடர்ந்து, கடந்து செல்வதற்கு - அரிதாகி விட்ட கவர்த்த காட்டு வழியில், சிறிய கண்ணும் பெரிய சினமும் உடைய ஆண் பன்றி, சேற்றில் வீழ்ந்து புரண்டதனால் சேறு பூசப் பெற்ற முதுகில் புழுதியும் படிந்திருக்க அக்கோலத்தோடு விரைந்து ஓடிச் சுருக்கவலை விரித்த பிளப்பில் வீழ்ந்து பட்டதாக, அது கண்ட அளவே, வேட்டை. நாய்கள், கூட்டமாக விரைந்து,வலையை அழித்து, பன்றி மீது பாய்ந்து கொன்று, கொண்ட இறைச்சி போக எஞ்சிய இறைச்சியைக் கானவர் கொண்டு செல்வர்"***[9] *என்கிறார்.*

### தனிமையைத் தவிர்ப்போம்

*தற்காலத்தில் இளைஞர்களும், இளம்பெண்களும் கைபேசியை வைத்துக்கொண்டு தனிமையில் முடங்கி இருக்கின்றனர். இப்படி வீட்டில் முடங்கி இருப்பது தவறானது வெளியே வந்து விளையாடுங்கள் என்ற கருத்தை நற்றிணை வலியுறுத்துகிறது.* ***வீட்டின் வெளியே வந்து விளையாடவேண்டிய இளம் பருவத்து மகளிர், தம் தோழியர்களுடன் கூடி விளையாடி மகிழாது, வீட்டின் கண்ணே அடைப்பட்டிருத்தல் அறனுடைய செய்கையும் ஆகாது. அவர்கள் உடலின் ஆக்கத்தையும் சிதைப்பதாகும்"***[10] *என்ற நற்றிணைப் பாடல் கூறுகின்றது. அதாவது வீட்டில் தங்கி மகிழ்ச்சியைக் குறைக்காமல் வீட்டின் வெளியே பொங்கும் நுரையுமாக பால் போல் கொப்பளித்து வரும் புதுப்புனலில் உள்ளம் மகிழ நீந்தி விளையாடுவோம் என தோழி தலைவியை அழைப்பதாக பார்க்கிறோம். கைபேசியை பார்த்துக் கொண்டு மூளையில் முடங்கிக் கிடக்கும் யுவதிகளுக்கு இப்பாடல் நல்ல அறிவுரை பகர்கிறது.*

### அறுவை மருத்துவம்

*சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை, நரம்பினால் தைத்த செய்தியை,*

***கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய***
***நரம்பின் முடிமுதிர் பரதவர்***[11]

*நற்றிணை பகர்கின்றது.* ***மேலும் போர்க்களத்தில் மார்பில் புண்படுவது இயல்பு. வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.***[12] *முற்கால இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறுவை*

மருத்துவத்துக்கான இன்றைய கூறுகள் நமக்கு பெரும் வியப்பளிக்கின்றன.

## முடிவுரை

நாகரிக வாழ்க்கைக்குச் சொந்தமானதாக நாம் காணும் பல்வேறு நற்பண்புகளையும், பழக்க வழக்கங்களையும், பல்வேறு செயல்கைகளையும் சங்கத் தமிழர்கள் பழங்காலம் முதலே செய்து வந்ததை நற்றிணை வழியாக இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்துள்ளது.

## சான்றெண் விளக்கம்

1. நற்றிணை பா.-355
2. சாமி சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.-77
3. திருக்குறள்.- 580
4. நற்றிணை பா.-11
5. நற்றிணை பா.-210
6. நற்றிணை பா.-280
7. முனைவர் அ. கந்தசாமி, பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள், ப.-9.
8. நற்றிணை பா.-82
9. பி. டி. சீனிவாச அய்யங்கார், தமிழர் வரலாறு, ப.128
10. டாக்டர். சி.பாலசுப்பிரமணியன், சங்க கால மகளிர், ப.-15
11. நற்றிணை பா.-207
12. தமிழ்நாடு அரசு ஆறாம் வகுப்பு தமிழ் பாடநூல், ப.-16

## துணைநூற் பட்டியல்

1. சுப்பிரமணியன், ச.வே., (உ.ஆ.) - சங்க இலக்கியம் எட்டுத்தொகை நற்றிணை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு - 2009.
2. கந்தசாமி, முனைவர் அ.-உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி , சென்னை 600 113 . வெளியீட்டு எண்; 753.முதற்பதிப்பு 2013.
3. சீனிவாச அய்யங்கார், பி. டி, தமிழர் வரலாறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18. முதற்பதிப்பு 2000.
4. பாலசுப்பிரமணியன், டாக்டர் சி, சங்க கால மகளிர், நறுமலர்ப் பதிப்பக வெளியீடு, பாரி நிலையம் 184 , பிரகாசம் சாலை சென்னை -600 108. முதற் பதிப்பு 1983.
5. தமிழ்நாடு அரசு ஆறாம் வகுப்பு தமிழ் பாடநூல், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தமிழ்நாடு முதற் பதிப்பு 2018.
6. மாணிக்கவாசகன், ஞா, (உ.ஆ.) - திருக்குறள், உமா பதிப்பகம், சென்னை -600 001. 18-ம் பதிப்பு 2014.
7. சிதம்பரனார்.சாமி, எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், இலக்கிய நிலையம், சென்னை-600 094. மூன்றாம் பதிப்பு 1986.